09-04-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 09.03.1994

விலகிய மற்றும் அன்பான, அதிசயமான, அன்பு மற்றும் சுகம் நிறைந்த அவதார நாள் சிவஜெயந்தி

இன்று மூன்று தேவர்களை படைக்கும் தந்தை தன்னுடைய பூஜைக்குரிய சாலிகிராம் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். புள்ளி வடிவமான ஜோதி சொரூபமான தந்தையின் பூஜை எப்படி நடக்கிறது, நினைவை கொண்டாடுகிறார்கள் என்றால் தந்தையின் கூடவே சாலிகிராம் ஆத்மாக்களாகிய உங்களுடைய பூஜையும் நடக்கிறது. தந்தை ஒருவர் திரிமூர்த்தி சிவன் என்று மகிமை செய்யப்படுகிறார் மற்றும் பூஜை செய்யப்படுகிறார் மேலும் சாலிகிராம் ஆத்மாக்கள் நீங்கள் அநேகர் இருக்கிறீர்கள். இருவருக்கும் பூஜை நடக்கிறது. ஏனென்றால் தந்தை அனைத்து குழந்தைகளையும் தனக்குச் சமமாக பூஜைக் குரியவர்களாக அக்கியிருக்கிறார். எப்பொழுதாவது சாலிகிராமை பார்க்கிறீர்கள் என்றால் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? இது நாமே தான் என்று அந்த மாதிரி அனுபவம் ஏற்படு கிறதா? அப்படி தந்தை தனக்கு சமமாக குழந்தைகளை தன்னைவிட உயர்ந்த பூஜைக்குரிய வராக ஆக்கியிருக்கிறார். குழந்தைகளின் பூஜை இரட்டை ரூபத்தில் நடக்கிறது. தந்தையின் பூஜை ஒரு சிவலிங்க ரூபத்தில் மட்டுமே நடக்கிறது மற்றும் குழந்தைகளாகிய உங்களுடைய பூஜை சாலிக்கிராம் ரூபத்திலும் நடக்கிறது, மற்றும் தேவ ஆத்மாக்கள் ரூபத்திலும் நடக்கிறது. தந்தையை விட அதிகமாக இரட்டை ரூபத்தின் பூஜையின் அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள். எப்படி இரட்டை வெளிநாட்டினர் என்று சொல்லப்படுகிறீர்கள் என்றால் இரட்டை பூஜைக் குரியவர்களாகவும் இருக்கிறீர்கள். இரட்டை கிரீடதாரியாகவும் நீங்கள் ஆகிறீர்கள். நிராகார தந்தை அப்படி ஆவதில்லை. சில இடங்களில் பக்தர்கள் சிவனின் சிலைக்கு கிரீடம் கொடுத்து விடுகிறார்கள். ஏனென்றால் கீரிட தாரியாக ஆக்கிவிடுகிறார். எனவே சில இடங்களில் கிரீடத்தை காண்பக்கிறார்கள். ஆனால் தந்தை ஒருபொழுதும் இரத்தினம் பதித்த தங்கம், வெள்ளியின் கிரீடம் அணிபவராக ஆவதில்லை. ஏனென்றால் நடை முறையில் கிரீடம் தலையில் வைக்கப்படுகிறது. நிராகார தந்தைக்கு தலை இருக்கிறதா என்ன? உடலே இல்லை என்றால் கிரீடத்தை எப்படி அணிவார். ஆனால் அன்பின் காரணமாக கிரீடம் காண்பித்திருக்கிறார்கள். ஆனால் தந்தையோ குழந்தைகளை தன்னை விட முன்னுக்கு வைத்திருக்கிறார். அவ்வளவு குஷி மற்றும் அவ்வளவு உயர்ந்த நினைவு இருக்கிறதா? பாப்தாதாவிற்கு தன்னுடைய ஜெயந்தியை கொண்டாடுவதில் குஷி இல்லை ஆனால் உங்கள் அனைவரின் ஜெயந்தியாகவும் இருக்கிறது. எனவே குழந்தைகளின் ஜெயந்தியின் குஷி இருக்கிறது. ஏனென்றால் தந்தை தனியாக எதையும் செய்ய முடியாது. இருந்தாலும் சில நேரங்களில் சில குழந்தைகளுக்கு நான் தான் செய்வேன் என்று மனதில் கொஞ்சம் எண்ணம் வந்து விடுகிறது. ஆனால் தந்தை இன்றி வெற்றி கிடைப்பதில்லை. அப்படி தந்தையும் தனியாக எதையும் செய்ய முடியாது என்றால் குழந்தைகளும் தனியாக எதையும் செய்ய முடியாது. ஒருவேளை தந்தை குழந்தை களை சந்திப்பதற்கு சாகாரத் திலானாலும் அல்லது அவ்வயக்த்திலானாலும் (ஆகாரத்தில்) பிரம்மாவின்

சரீரத்தை ஆதாரமாக எடுக்க வேண்டியதாக இருக்கிறது. பிரம்மா இன்றி கூட ஒன்றும் செய்ய முடியாது. அப்படி தந்தைக்கு குழந்தைகள் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது மேலும் குழந்தைகளுக்கு தந்தையின் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது. ஒருவர் இன்னொரு வரின்றி எதையும் செய்ய முடியாது. ஒருவேளை தந்தையை விலக்கி வைத்துவிட்டு உடன் வைத்துக் கொள்ளவில்லை என்றால் தனியாக எதையாவது செய்ய முடியுமா? தந்தைக்கு செய்ய முடியுமா? தந்தையும் செய்ய முடியாது. அப்படி தந்தையும் குழந்தைகளும் சேர்ந்தே தெய்வீக ஜென்மம் எடுப்பது, சேர்ந்த உலக மாற்றம் செய்வது, மேலும் சேர்ந்தே தன்னுடைய இனிமையான வீட்டிற்கு செல்வது - இது டிராமாவில் அழியாததாக அடங்கி யிருக்கிறது. இதை யாரும் மாற்ற முடியாது. அப்படி இந்த மாதிரி இருப்பது நல்லது தான் இல்லையா? பிடித்திருக்கிறது தான் இல்லையா? அப்படியானால் இன்று அனைவரும் தந்தையின் பிறந்த நாள் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? அல்லது தன்னுடைய பிறந்த நாளை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? தந்தை உங்களுடைய பிறந்த நாள் என்று கூறுவார் மற்றும் குழந்தைகள் தந்தையின் பிறந்த நாள் என்று கூறுவார்கள்.

இந்த தெய்வீக அவதாரம், அந்த நாளை சிவஜெயந்தி அல்லது சிவராத்திரி என்று கூறுகிறார்கள். இது எத்தனை ஆத்மாக்களுக்காக அன்பு நிறைந்த, சுகம் நிறைந்த அவதார மாக இருக்கிறது. சத்யுகத்தில் கூட இந்த மாதிரி பிறந்த நாள் கொண்டாட மாட்டீர்கள். ஆத்மாக்கள் ஆத்மாக் களின் பிறந்த நாளை கொண்டாடுவார்கள் ஆனால் இந்த நேரம் ஆத்மாக்கள் பரமாத்மாவின் பிறந்த நாளை கொண்டாடுகிறார்கள். முழு கல்பத்திலும் இந்த மாதிரி வித்தியாசமான மற்றும் பிரியமான அதிசயமான பிறந்த நாள் ஒரே நேரத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாளாக இருக்கிறது. இந்த மாதிரி எப்பொழுதாவது நடக்குமா என்ன? ஒருவேளை நாள் ஒன்றாக இருந்தால் கூட வருடம், மாதம், தேதியில் வித்தியாசம் ஏற்பட்டுவிடும். ஆனால் இந்த அவதார நாள் எவ்வளவு அதிசயமானது இது தான் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் சேர்ந்தே இருக்கிறது.

இந்த நினைவுச் சின்ன நாள் அன்று பக்தர்கள் கூட இரண்டு விசேஷங்களினால் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். இரண்டு விசேஷங்கள் என்ன? ஒன்று விசேஷமாக விரதம் கடைப் பிடிப்பது மற்றும் இன்னொன்று பலி கொடுப்பது. ஆனால் தன்னை சமர்ப்பணம் செய்யாமல் வேறு எதையோ பலிக் கொடுக்கிறார்கள். அப்படி பலி கொடுப்பது, விரதம் கடைபிடிப்பது இரண்டு விசேஷமும் இந்த நாளுக்கானது. அனேக விதமான விரதத்தை கடைப்பிடிக்கிறார்கள். சிலர் உணவுக்காக செய்து கொள்கிறார்கள். சிலர் கண்விழித்திருக்கிறார்கள். சிலர் தூரத் தொலைவிலிருந்து கால்நடையாக நடக்கின்றார்கள். எவ்வளவு தான் களைப்படைந்து விட்டாலும் தன்னுடைய விரதத்தை நிறைவேற்றி விடுகிறார்கள். எத்தனை நாளானாலும் சரி, எவ்வளவு நேரமானாலும் சரி விரதத்தை விடுவ தில்லை. அப்படி இந்த நினைவுச் சின்னத்தை யாரிடம் காப்பியடித்திருக்கிறார்கள். உங்களுடைய பிராமண வாழ்க்கையின் விரதம், அது பக்தர்களுக்கு ஒரு நாள் விரதம் ஆகும். நீங்கள் கூட எப்பொழுது பிராமண பிறவி மற்றும் தெய்வீக பிறப்பை எடுத்தீர்களோ அப்போது என்ன விரதம் எடுத்தீர்கள்? எப்பொழுதும் அஞ்ஞான தூக்கத்திலிருந்து

விழிப்பதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் தூங்கவும் செய்வோம் என்ற விரதம் எடுத்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் அனைவரும் கூட சிவ ஜெயந்தி மற்றும் தெய்வீக பிறந்த நாளன்று கண் விழிப்பதற்கான விரதம் எடுத்திருக் கிறீர்கள். எனவே பக்தர்களும் இதன் நினைவாக கண் விழிக்கின்றார்கள். மேலும் நீங்கள் அனைவரும் கூட சுத்தமான உணவு சாப்பிடுவதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்கள் எனவே பக்தர்களும் என்ன ஆனாலும் சரி நோய்யுற்றவராக இருந்ததாலும் கூட உணவின் விரதத்தை கடைபிடிக்கிறார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் கூட மனதின் எதிரே, உடலின் எதிரே உங்களுக்கு சூழ்நிலைகள் (பிரச்சனைகள்) வந்தது என்றால் விரதத்தை விட்டுவிடுவீர்களா என்ன? எப்பொழுதாவது கலப்படமாக அருந்திவிடுவது, அப்படி செய்கிறீர்களா என்ன? யாரும் பார்க்கவில்லை சாப்பிட்டு விடலாம் என்று அப்படியா? தன்னுடைய நியமத்தை உறுதியாக வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது முதிர்ச்சி அடையாத காய் மாதிரி உறுதியற்ற வராக இருக்கிறீர்களா? பார்த்ததும் இதை சாப்பிட வேண்டும் என்ற ஆசை சில நேரம் ஏற்படுகிறதா? ஒரே மாதிரியான உணவை சாப்பிட்டு சாப்பிட்டு மற்ற உணவுகளையும் சாப்பிடவேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறதா? நல்லது. இதில் அமெரிக்கா,

ஆஸ்டிரேலியா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ரஷ்யா அனைவரும் உறுதியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் பிஞ்சாக உறுதியற்றவராக இருக்கிறீர்களா?

இரட்டை வெளிநாட்டினர் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டனர். மேலும் பாரத வாசிகளோ தேர்ச்சி பெற்றவர்கள் தான் இருந்தாலும் பாரதவாசிகளுக்கு சுலபமானது, இரட்டை வெளி நாட்டவர்களுக்கு இந்த விஷயத்தில் சிறிது கூடுதலாக முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆனால் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள் அதற்காக பாரட்டுக்கள் அப்படியே பிறந்த நாளுக்கான வாழ்த்துக்கள். இன்னொன்று தேர்ச்சி பெற்றதற்கான வாழ்த்துக்கள் மற்றும் மூன்றாவது ஒரு பொழுதும் குழப்பத்தில் வராமல் எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும் இதில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா? என்ன செய்வது என்று இவ்வாறு கூறிவிடு கின்றீர்களா? இரட்டை வெளிநாட்டினருக்காக பாப்தாதா இன்று மிகவும் சுவாரஸ்யமான பாஷையை (வார்த்தை) வெளிப்படுத்தி இருக்கின்றார். ஏனென்றால் இரட்டை வெளி நாட்டினர் அனுபவத்தை அதிகமாக விரும்புகிறார்கள் தான் இல்லையா. ஏதாவது நடக்க வேண்டும், ஏதாவது அனுபவிக்க வேண்டும் அப்படியே அமைதியாக இருந்து என்ன செய்வது. பாப்தாதா சிவராத்திரி அன்று இந்த வார்த்தைகளிலிருந்து விடுபடுவதற்கான அனைவரிடமிருந்தும் விரதம் எடுக்க வைக்கின்றார். விரதம் எடுப்பதற்கு தயாராக இருக்கின்றீர்களா? அல்லது எப்பொழுது கேட்பீர்களோ அப்பொழுது இதுவோ கொஞ்சம் கொஞ்சம் கடினம் என்று கூறு வீர்களா? முதலில் கடினம் என்ற வார்த்தையை எண்ணத்தில் கூட கொண்டு வரமாட்டோம் என்ற இந்த விராதத்தை எடுப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா? எதுவரை எண்ணத்தில் உறுதி இல்லையோ அதுவரை வெற்றி ஏற்படுவதில்லை என்று பாப்தாதாவும் பார்த்திருக்கிறார். எண்ணம் ஏற்படுகிறது ஆனால் உறுதியில்லை என்றால் பலகீனம் வந்து விடுகிறது.

அதிகமாக பலகீனமான வார்த்தையாக என்ன (வாட்) செய்வது என்று கூறுகிறார்கள். இப்பொழுது வாட் என்று சொல்லாதீர்கள். வாட்டிற்கு பதிலாக என்ன கூறுவீர்கள்? ப்ளையி (பறப்பது) அப்படி எப்பொழுதெல்லாம் வாட் என்ற வார்த்தை வருகிறது என்றால் பிராமண அகராதியில் வாட்டிற்கு பதிலாக ப்ளையி என்ற வார்த்தை இருக்கட்டும். இன்னொரு வார்த்தை என்ன கூறுகிறீர்கள்? ஓய் (ஏன்) அப்படியானால் ஓய்யை என்ன செய்வீர்கள்? பை பை நிரந்தரமாக போ..போ.. (பை...பை...) என்று கூற வேண்டும். அல்லது சிறிது நேரத்திற்காக என்பது கூடாது. மேலும் மூன்றாவது வார்த்தையாக என்ன கூறுகின்றீர்கள்? கவ் (எப்படி) கவ் கிடையாது நோ (தெரிந்துக் கொள்வது) நோ என்றால் தெரிந்திருப்பவர்கள். எப்பொழுது திரிகாலதரிசி ஆகி விட்டீர்களோ, தெரிந்தவர்களாக ஆகிவிட்டீர்கள் என்றால் எப்படி என்று கூறுவீர்களா என்ன? கவ் (எப்படி) என்று கூறுவது என்றால் காகம் கத்துவது போன்றது. இது பிடித்திருக்கிறதா என்ன? இது போன்ற வார்த்தைகள் தான் பலகீனத்தை கொண்டு வருகிறது. இதே வார்த்தைகள் தான் வீணான எண்ணம் என்ற கதவுகளைத் திறக்கிறது. யேசித்துப் பாருங்கள். எப்பொழுதெல்லாம் வீணான எண்ணங் களின் வரிசை ஏற்படுகிறது என்றால் எந்த வார்த்தையினால் ஏற்படுகிறது? இந்த வார்த்தை களினால் தான் ஏற்படுகிறது? அப்படித்தானே? என்ன ஆகும்? என்ன அல்லது எப்படி ஆகும், இது எப்படி ஏற்பட்டது இதை எப்படி சொன்னார்கள், இதை ஏன் சொன்னார்கள், இப்பொழுது என்ன செய்வது, எப்படி செய்வது, இவ்வாறு பலகீனத்தின் மற்றும் வீணான எண்ணங்களின் கதவுகள் ஆகும். இந்த வார்த்தைகளை பிராமணர்களின் அகராதியிலிருந்து மாற்றிவிடுங்கள். பிறகு என்ன ஆகும்? நீங்களும் மாறிவிடுவீர்கள் இல்லையா? பக்தர்கள் உங்களைத்தான் காப்பி செய்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய எல்லைக் காப்பாற்பட்ட விஷயங்களை அவர்கள் எல்லைக்குட்பட்ட ரூபத்தில் நினைவு ரூபமாக வைத்திருக்கின்றார்கள். இந்த உறுதியான விரதம் எடுப்பது தான் சிவஜெயந்தி மற்றும் சிவராத்திரி கொண்டாடு வதாகும். கொண்டாடுவது என்றால் அப்படி ஆவது, கேக் வெட்டுவது, லைட்டை (விளக்கு) எரிய வைப்பது, தீபத்தை ஏற்றுவது என்பது கொண்டாடுவது அல்ல. இந்த மனமகிழ்ச்சியான விஷயங்களும் அவசியம் தான் ஆனால் இதன் கூடவே சிலவற்றை (வீணான எண்ணங்களை) வெட்ட வேண்டும், சிலவற்றை எரிக்கவும் வேண்டும். ஒரு பக்கம் தீபம் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றுகிறீர்கள், இரண்டாவது கேட் வெட்டுகின்றீர்கள் மூன்றாவது கொடி ஏற்றுகின்றீர்கள், நான்காவது பாடல் பாடு கின்றீர்கள், ஐந்தாவது நடனமும் ஆடுகின்றீர்கள். மேலும் என்ன செய்கிறீர்கள்? இனிப்பு வழங்குகின்றீர்கள் மற்றும் சாப்பிடு கின்றீர்கள். அப்படியானால் இப்பொழுது எந்த ஆறு விஷயங்களை செய்ய வேண்டும்? முதலில் இப்பொழுதிலிருந்து திடத்தன்மையின் மூலமாக வெற்றியை அடையத்தான் வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தின் தீபத்தை மனதில் ஏற்றுங்கள். பார்க்கலாம், தெரியவில்லை, தெரிய வில்லை என்பது வேண்டாம். ஆகத்தான் வேண்டும், செய்யத்தான் வேண்டும், பார்க்கலாம் என்ற வார்த்தை வேண்டாம். மேலும் இரண்டாவது கேக் வெட்டுகின்றார்கள், கேக்கை அப்படியே சாப்பிட மாட்டார்கள் வெட்டித்தான் சாப்பிடுகின்றார்கள். அப்படியானால் எதை வெட்டுவீர்கள்? என்னவெல்லாம் சம்பன்னம் (முழுமை) மற்றும் சம்பூர்ணம் (நிறைவு) ஆவதில் ஏதாவது எண்ணத்தின் அளவில் கூட தடையாக இருக்கிறது என்றால் அதனை இப்பொழுதிலிருந்தே வெட்டி விடுங்கள், அழித்துவிடுங்கள், மேலும் என்ன பலகீனம் இருக்கிறதோ அந்த இடத்தில் சக்தியை தாரணை

செய்வதற்கான கேக்கை சாப்பிடுங்கள். முதலில் வெட்டுங்கள், பிறகு சாப்பிடுங்கள், புரிந்ததா? எந்த கொடியை ஏற்றுவீர்கள்? இதுவோ நினைவுச் சின்ன ரூபத்தில் கொடி யேற்றுகின்றீர்கள். ஆனால் தன்னுடைய இதயத்தில் தந்தையை ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் மூலமாக எப்பொழுதும் பிரத்யட்சம் செய்வதின் கொடியை பறக்க விடுங்கள். எந்தவொரு எண்ணம், சொல், மற்றும் செயலும் தந்தையை பிரத்யட்சம் செய்யாததாக இருக்கக்கூடாது. ஏனென்றால் அனைவரின் உள்ளத்தில் தந்தை யின் அன்பின் காரணமாக தந்தையை பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது அதை எப்படி செய்வீர்கள்? எப்பொழுது தன்னுடைய எண்ணம் சொல் மற்றும் செயல் மூலமாக இதயத்தில் பிரத்யட்சம் செய்வதற்கான கொடியை பறக்க விடுங்கள் மேலும் எப்பொழுதும் குஷியாக இருப்பதற்கான நடனம் ஆடுங்கள், சிலநேரம் குஷியாக, சிலநேரம் சோர்வாக அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுது சோர்வாக இருக்கின்றீர்களா அப்பொழுது தன்னுடைய போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள் மேலும் எப்பொழுது குஷியாக இருக்கின்றீர்களா அப்பொழுதும் போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு இரண்டு போட்டோவையும் ஒன்றாக வைத்துப் பாருங்கள். எது நன்றாக இருக்கிறது, இதுவா? அதுவா? என்றுப் பாருங்கள். ஆகையால் எப்போதும் மகிழ்ச்சியோடு, குஷியோடு இருப்பதற்கான நடனம் ஆடிக் கொண்டேயிருங்கள். என்ன தான் ஆனாலும், யாராவது குஷியை காணாமல் போவதற்கு எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், என்னவானாலும் சரி (மாயா யார் மூலமாகவோ செய்விக்கும்) எந்த விதத்திலாவது யாராவது குஷியை குறைப்பதற்காக மற்றும் குஷியில் இல்லாமல் செய்வதற் காக எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் நீங்கள் எதுவரை வாழ வேண்டுமோ அதுவரை குஷியாக இருக்க வேண்டும். இந்த உறுதியான விரதம் எடுத்திருக்கிறீர்கள் இல்லையா? உங்களால் என்ன செய்ய முடியாது? வில் பவர் (மனோபலம்) இருக்கிறது அல்லவா? யாரிடம் வில் பவர் உள்ளதோ அவரால் என்னதான் செய்ய முடியாது? ஒருவேளை மாஸ்டர் சர்வ சக்திவானாகிய நீங்களே செய்யவில்லை என்றால் வேறு யார் செய்வார்கள்? வேறு யாரவாது பிறக்கப்போகின்றார்களா? அல்லது நீங்கள் தானா? மாலையின் மணியாக நீங்கள் தான் ஆக வேண்டும்? அல்லது மற்றவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களா? முதல் டிவிஷனில் வரவேண்டும் அல்லவா? அல்லது இரண்டாவது வந்தாலும் பரவாயில்லை அப்படியா? எதுவரை வாழ் கின்றோமோ அதுவரை குஷியாக இருப்பேன் என்ற உறுதியான எண்ணம் (விரதம்) எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் யார் குஷியாக இருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் குஷி என்ற இனிப்பை வழங்கிக் கொண்டேயிருப்பார். வெளி உலக இனிப்பில் வாய் மட்டும் தான் இனிக்கும். ஆனால் இந்த இனிப்பால் மனம், உடல், உள்ளம் அனைத்தும் குஷி அடைந்து விடுகிறது. அப்படி இந்த இனிப்பை வழங்க வேண்டும். மேலும் பாடலாக என்ன பாடு கின்றீர்கள்? இனிமையான பாபா, அன்பான பாபா, என்னுடைய பாபா இதே பாடல் தானே பாடுகின்றீர்கள், இதே பாடல் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டேயிருக் கட்டும். செல் முடிந்து விட்டது, பேட்டரி முடிந்து விட்டது ஆகையால் பாடலும் நின்று விட்டது என்று அப்படி யிருக்கக்கூடாது. பேட்டரி குறைந்தால் எப்படி பாடுகின்றீர்கள்? அனைவருக்கும் அனுபவம் இருக்கிறது தானே? பிறகு என்ன ஆகிறது? என்னுடையது என்றால் பாபா... என்றால், என்றால் என்ற வார்த்தை வந்து விடுகிறது. என்னுடைய பாபா என்று மட்டும் கூறக்கூடாது, என்னுடையது என்றால் பாபா சேர்ந்து விட்டது அல்லவா?

பேட்டரி சர்ஜ் குறைந்து விட்டது என்றால் சப்தமும் குறைந்து விடுகிறது. அதில் என்றால், என்றால் என்ற வார்த்தை சேர்ந்து விடுகிறது. பெருமைக்காக என்னுடைய பாபா அல்ல, என்னுடைய என்றால் பாபா.

ஆக சிவராத்திரி கொண்டாடுவது என்றால் இந்த உறுதியான விரதம் எடுப்பது. அந்த மாதிரி சிவராத்திரி கொண்டாடினீர்கள் இல்லையா? அல்லது யோசித்து பின்னால் பதில் தருவீர்களா? நல்லது. மிகுந்த புத்திசாலிகள். இப்பொழுதே இரட்டை வெளிநாட்டினர் யோசித்து விட்டீர்கள். எனவே நீங்கள் இரட்டை புத்திசாலிகள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் மதுபனில் விசேஷமாக என்ன சேவை செய்தீர்கள்? பிரம்மா பாபாவை பிரத்யட்சம் செய்தீர்களா? ஸ்டாம்ப் (தபால் தலை) வெளியிட்டு விழாவை கொண்டாடினீர்கள், விசேஷமாக யோகாவும் செய்தீர்கள் இல்லையா? சக்திசாலியான யோகா செய்தீர்கள் என்றால் தடைகளை அழிப்பவர்களாகவும் ஆகி விட்டீர்கள். அனைவரின் யோகாவும் அது மதுபன் நிவாசிகளினுடையதானாலும், இரட்டை வெளிநாட்டினருடையது ஆனாலும், அல்லது நாலா புறத்திலுமுள்ள பிராமண குழந்தைகளினுடையதானாலும் அதிசயம் செய்தது. ஏனென்றால் நாலாபுறத்திலும் உள்ள அனைவருக்கும் பிரம்மா பாபாவை பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்ற இந்த ஒரே எண்ணம் தான் இருந்தது. சிலர் அங்கு இங்கு செல்லும் சேவை செய்தனர், சிலர் மனம் மூலம் சேவை செய்தனர் சிலர் வாய்மொழி சேவை செய்தனர், அப்படி யாரெல்லாம் யோக நிலையில் இருந்து சேவை செய்தார்களோ அந்த மாதிரி சேவாதாரிகள் அனைவருக்கும் வெற்றிக்கான வாழ்த்துக்கள். எவ்வளவு குஷி கிடைத்தது. இதயப்பூர்வமான மிகவும் சூட்சும மான அன்பு இருக்கிறது. அனைவரும் பிரம்மா பாபாவை பார்த்திருக்கின்றீர்களா? அல்லது தெரிந்திருக்கின்றீர்களா? என்ன கூறு வீர்கள்? நான் பார்த்திருக்கின்றேன் என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள், தெரிந்திருக்கின்றேன் ஆனால் இப்பொழுது பார்க்க வேண்டும் என்று யார் கூறுகின்றார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். (மிகக் குறைந்தவர்கள் கையை உயர்த் தினார்கள்) நல்லது அனுபவம் செய்தீர்களா? ஏனென்றால் அனுபவம் ஒரு கண்ணாகும். எப்படி ஸ்தூல கண்களால் பார்க்கப்படுகின்றோ அனைத்தையும் விட பெரிய கண் அனுபவம் ஆகும்., அனுபவத்தின் கண்ணால் பார்த்தால் கூட பார்த்ததாக கூறலாம். ஒருவேளû அனுபவமும் செய்யவில்லை மேலும் அவ்யக்த ரூபத்தில், அவ்யக்த நிலையின் மூலமாகவும் பார்த்த தில்லை என்றால் பின்பு தங்களது பெயரை தாதிகளிடம் கொடுத்தால் அவர்கள் அனுபவம் செய்ய வைப்பார் கள். இதில் அப்படியே நின்று விடாதீர்கள். ஏனென்றால் மற்றவர்களுக்கு ஸ்டாம்ப் மூலமாக பிரம்மா பாபாவை அனுபவம் செய்ய வைக்கின்றீர்கள், மேலும் தான் அனுபவம் செய்யவில்லை என்றால் நன்றாக இருப்பதில்லை தானே? எப்பொழுது பிரம்மா பாபாவின் போட்டோவின் முன்பு அமர்கின்றீர்களோ, சைத்தன்யமான சந்திப்பின் அனுபவத்தின் மூலம் பிராப்திகள் ஏற்படுகிறது தான் இல்லையா? உரையாடலுக்கு பதில் கிடைக்கிறது தானே? அவ்வாறு இல்லையா? கிடைக்கிறது தானே? அப்படியானால் அவர் தந்தையாக இருந்து கேட்கின்றார் மேலும் பதிலும் கொடுக்கின்றார். ஆகையால் இந்த அனுபவத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு விடாதீர்கள். புரிந்ததா? அனைவரும் என்னென்ன சேவை செய்தீர்களோ விசேஷமாக பாரவாசிகள் அதிகமாக

சேவையின வாய்ப்பை எடுத்திருந்தார் கள். பாப்தாதா பெயரை குறிப்பிடவில்லை. ஆனால் அனைவரும் தன்னுடைய சேவையின் பிரதிபலனாக சேர்த்து பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். இரட்டை வெளி நாட்டினருக்கும் சேவைக்கான வாய்ப்பு கிடைத்து விட்டது. நன்றாக இருந்தது இல்லையா? நடனம் ஆடினீர்கள் இல்லையா? நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள பிராமண ஜென்மம் என்ற தெய்வீக ஜென்மத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் குழந்தை சேர்ந்தே இருக்கும் நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரட்டை பூஜைக்குரிய சொரூபத்தின் நினைவில் இருக்கக் கூடிய சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உறுதியான எண்ணம் மற்றும் விரதத்தை கடைப்பிடிக்கக்கூடிய வெற்றியின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் குஷியாக அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளுக்கு, மூன்று தேவர்களை படைக்கும் தந்தை மற்றும் பிரம்மா பாபாவிடமிருந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளும். கூடவே மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

வரதானம் : தனது சிரேஷ்ட மனநிலை மூலம் அலைந்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சிரேஷ்ட இடத்தை தரக்கூடிய லைட் (ஒளி) சொரூபம் ஆகுக.

எப்படி ஸ்தூலமான ஒளியின் மீது விட்டில் பூச்சி தானாகவே வந்து விடுகிறது, அதுபோல மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரமாகிய உங்களிடம் அலைந்துக் கொண்டி ருக்கும் ஆத்மாக்கள் மிக வேகமாக வந்து அடையும். இதற்காக பயிற்சி செய்யுங்கள் - ஒவ்வொருவரின் நெற்றியின் மீதும் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தை பாருங்கள். சரீரத்தை பார்த்தாலும் பார்காதீர்கள். எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரத்தின் (ஆத்மா வின் மீது) பார்வை செல்ல வேண்டும். எப்பொழுது அப்படிப்பட்ட ஆன்மீக பார்வை இயல்பாக மாறிவிட்டால், உங்களுடைய இந்த உயர்ந்த மனநிலை மூலம் அலைந்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு யதார்த்தமான (உண்மையான) இடம் கிடைத்து விடும்.

சுலோகன்: சேவையின் மகத்துவத்தை தெரிந்துக் கொண்டு ஏதாவதொரு சேவையில் பிஸியாக இருக்கக்கூடியவர்கள் தான் ஆல்ரவுண்ட் சேவாதாரி ஆவார்கள்.